1973 ஆகஸ்ட் 4]

(1) காறல், (2) பன்னு, கூரல், (3) சாவாளே, (4) நகரை, செண்டைல், (5) துமிளி, (6) உளுவை, (7) திருக்கை, (8) சுறு, (9) நாக்கு, (10) வாவல், (11) வஞ்சிரம், (12) நண்டு, (13) இருல். மற்றும் தமிழ்நாட்டின் சில குறிப்பிட்ட பகுதிகளில் முக்கியமாகக் கிடைக்கும் மீன் இனங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:—

| இடத்தின் பெயர். | பிடிபடும் மீன் இனங்கள். |
|---|---|
| (1) மன்னர் வளேகுடா | ஆழ்கடல் இருல். ஆழ்கடல் சிங்கி இருல். |
| (2) மண்டபம், இராமேஸ்வரம் | காரல், கெளித்தி, சுதும்பு, இருல். |
| (3) கன்னியாகுமரி | சிங்கி இருல். |
| (4) வாட்ஜ்பேங்க் | பார்மீன்கள் எனப்படும் குருவிலி, செப்பிலி. |
| (5) எண்ணூர், பழவேற்காடு | இருல். |

புதுரக மீன்பிடி வலேகள்

*14. வினு—திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாள் ஒன்றுக்கு 50 டன் வீதம் மீன் பிடிக்க வல்ல பர்சின் வலேகளே அண்மையில் மண்டபத்தில் பரிக்ஷித்துப் பார்க்கப் பட்டதா?

(இ) ஆமெனில், அந்த வலேயை உபயோகிக்க அரசு திட்ட மிட்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மண்டபம் மீன்துறை படகு கட்டும் நிலேயத்தில் இவ் வலேயை உபயோகிக்கப்பதற்கான வசதிகள் கொண்ட 50 அடி நீளமுடைய விசைப்படகொன்று (Combination Type) கட்டப்பட்டு வருகிறது. இப் படகு கட்டி பூர்த்தியானவுடன் “பர்சின்” வலே உபயோகிப்பது பற்றிய பரிசோதனேகள் தொடர்ந்து நடத்தப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நம்முடைய தமிழகத்தில் நீண்ட கடற்கரை இருந்தும் மீன்பிடித் தொழில் வளர்ச்சிபெற வில்லே. காரணம் பலயிடங்களில் இந்தத் தொழில் அபிவிருத்தி

செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளுக்கு மாருக நார்வேஜியன் ஷிப் கொண்டு அவர்களே போய் மீன்பிடித்து வந்துவிடுகிருர்கள் என்று சொல்லப்படுகிறது. அந்நிய நாட்டுடன் தொடர்பு கொண்டாவது—இந்தத் தொழில் அபிவிருத்தி அடைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளே அரசு எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மீன் பிடித் தொழில் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக பல்வேறு கருத்தரங்குகளேத் தமிழக அரசு நடத்தி வருகிறது. நம்மிடத்திலுள்ள ஒரு முக்கியமான குறை பெரிய படகுகள் இல்லே, பெரிய படகுகளேக் கட்டுகிற துறை இல்லே என்பதாகும். 43-50-க்கு பெரிய படகுகளேக் கட்டுகிற திட்டத்தை மேற்கொண்டு, போலந்து நாட்டுடன் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினுல் படகு அமைக்கும் துறை அமையவும் வாய்ப்பு இருக்கிறது. அதன் பிறகு தொடர்ந்து இத்தொழிலில் நல்ல வளர்ச்சியைக் காண முடியும் என்று நம்புகிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** சில மீன்கள் என்ன சிறப்பான வலேயைப் போட்டாலும் சிக்குவது இல்லே என்று தெரிகிறது. வலேயில் சிக்காத மீன்களேப் பிடிக்க திட்டம் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன். (சிரிப்பு.)

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அதைத் தனிப் பட்டவர்கள் தான் தூண்டில் போட்டு ஒவ்வொன்ருகப் பிடிக்க வேண்டும். (சிரிப்பு.)

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பெரிய படகுகள் இல்லாத காரணத்தினுல் இந்தத் தொழில் வளர்ச்சி அடையவில்லே என்பது போலச் சொல்கிருர்கள். இன்றைக்கு 32 அடி படகுகளே வாங்கின வர்கள்தான் சுமாராக இருக்கிருர்கள். 36 அடி படகுகளே வாங்கியவர்கள் மூழ்கியே போய்விட்டார்கள். இதுபற்றி அரசு ஒரு நிபுணர் கமிட்டியைப் போட்டாவது எந்த எந்த வகையில் இந்தத் தொழில் வளர்ச்சி அடைய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பரிசீலிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** 36 அடி படகு வாங்கியவர்கள் மூழ்கியே போய்விட்டார்கள் என்று சொல்வது தவறு. எந்தக் காரணத்தினுல் அப்படிச் சொல்கிருர்கள்

[1973 ஆகஸ்ட் 4]

என்பதைத் தெரிவிக்க வேண்டும். 36 அடி படகு விலை அதிகமாக இருக்கிறது என்பதனால் சிலர்தான் வாங்கியிருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் 32 அடி படகைத்தான் வைத்திருக்கிறார்கள். 36 அடி படகை வைத்திருப்பவர்கள் நஷ்டம் அடைகிறார்கள் என்று கூறுவதற்கில்லை. அப்படி ஏதாவது குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நிகழ்ச்சி இருந்தால் அதை எடுத்துச் சொன்னால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

## கும்மிடிப்பூண்டித் துணைவட்டத்தில் மீன்பிடித் துறைகள்

*15. வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டித் துணை வட்டத்தில் உள்ள சுண்ணாம்புக்குளம், ஆரம்பாக்கம் பகுதி மீனவர்கள் தம் படகுகளை தாம் வசிக்கும் பகுதிகளுக்கே எளிதில் கொண்டு வர "சிறு துறைகள்" அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

(இ) இது எப்போது நிறைவேறும்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) 650 லட்சம் ரூபாய் செலவில் சென்னையில் ஒரு பெரிய மீன்பிடி துறைமுகம் அண்மையில் கட்டப்படவிருப்பதால், சுண்ணாம்புக் குளம், ஆரம்பாக்கம் பகுதிகளைக்கொண்ட பழவேற்காட்டில் பெரிய துறைகளைக் கட்டுவதற்கு இந்திய அரசு விரும்பவில்லை.

இருப்பினும், தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள துறைமுக ஆய்வுக்குழு கடலோரப் பகுதிகளை ஆய்வு செய்யும் போது, பழவேற்காடு போன்ற இடங்களும் ஆய்வு செய்யப்பட்டு, அதன் முடிவு தெரிந்த பின்னர், மேல் நடவடிக்கை எடுக்கப் படும்.

**திரு. கா. வேழவேந்தன்:** மேற்சொன்ன திட்டங்கள் பாவலாக மீனவர்களுக்குப் பயன்படும் என்றாலும் சுண்ணாம்புக் குளம், ஆரம்பாக்கம் கிராமப்புறத்திலுள்ள மக்கள் கட்டுமரங்களைத் தாம் வாழும் பகுதிகளுக்கு எடுத்துப்போக சிறு துறைகள்